


**29. 09. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள முப்படைகள் தயார் நிலையில் இருப்பதன் அவசியத்தை பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

2. மின்னணு உற்பத்தி துறை, மிகப்பெரிய வேலை வாய்ப்பு துறையாக விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், டாக்டர் எல்.முருகன் ஆகியோர் இன்று நேரில் சந்தித்தனர்.

4. கரூர் சம்பவம் குறித்து சமூக வலைதளங்களில் வதந்திகளை பரப்ப வேண்டாம் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்திற்கு ரோஹன் போபண்ணா இணை முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள</u>

***********

ராஜ்நாத்சிங்

உள் நாட்டு, வெளிநாட்டு பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள தயார்நிலைக்கான அவசியத்தை பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய கடலோர காவல் படை தலைவர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், பன்முக அச்சுறுத்தலை எதிர்கொண்டு செயலாற்ற பாதுகாப்பு படையினர் எப்பொழுதுமே விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மாறிவரும் தற்போதைய சூழல்களில் புதிய அச்சுறுத்தல்களும், புதிய சவால்களும் உருவெடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே முப்படைகளின் தனித்துவமான பதிலடி நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்னணு தளவாட தொழில்நுட்பங்கள் தற்போதைய காலத்தின் தேவை என்றும் திரு.ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

***********

<u>அஷ்விணி வைஷ்ணவ்</u>

நம் நாட்டின் மிக்ப்பெரிய வேலை வாய்ப்பு துறையாக மின்னணு உற்பத்தி துறை இன்னும் சில ஆண்டுகளில் உருவெடுக்கும் என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மின்னணு உற்பத்தி சூழல் வேகமாக விரிவடைந்து வருவதாக தமது சமூகவலைதள பதிவில் கூறியுள்ள அவர், ஒவ்வொரு வாரமும் புதிய மின்னணு விநியோகிப்பாளர்கள், குறிப்பாக சிறு குறு நடுத்தர தொழில்முனைவோர் வளர்வதாக எடுத்துரைத்தார்.

அதேபோல் மின்னணு வடிவமைப்பு திறன்களும் மேம்பட்டு வரும் நிலையில் புதிய வடிவங்களும், புதிய தயாரிப்பு நடைமுறைகளும் உருவாகி வருவதாக அமைச்சர் கூறினார்.

முன்னதாக பீகாரில் 3 அம்ரித் பாரத் விரைவு ரயில்கள் உட்பட 7 ரயில்களை இன்று துவக்கிவைத்து பேசிய அமைச்சர் நாட்டின் வளர்ச்சிக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி பெரும் திட்டத்தை வடிவமைத்துள்ளதாக கூறினார்.

***********

<u>.. மியூசிக் ..</u>

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு, ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், பிரதமரின் கதி சக்தி, தேசிய பெருந்திட்டத்தின் கீழ், நாட்டில் கட்டமைப்பு புரட்சி ஏற்பட்டுள்ளது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் நாட்டின் கட்டமைப்பு சார்ந்த திட்டங்கள், சிறப்பான துரித வளர்ச்சி பாதையில் செல்லும் நிலையில், இத்துறையின் தடைகளை அகற்றி விரைவான மேம்பாட்டு நடவடிக்கைகளால் நம் தேசம் வளர்ச்சி பாதையில் விரைந்து முன்னேறி வருகிறது.

மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஆட்சிமுறையின் விரிவாக்கமே கதி சக்தி என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

.. பிரதமர் வாய்ஸ் ..

பல்வேறு அமைச்சகங்களையும், அரசு துறைகளையும், ஒருங்கிணைத்து தடையற்ற துரித வளர்ச்சியை முன்னெடுத்து செல்லும் வகையில் 2021ஆம் ஆண்டு கதி சக்தி பெருந்திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ், முதல்முறையாக 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 57 அமைச்சகங்கள் ஒரே தளத்தில் இணைந்து, ஆயிரத்துக்கும் மேற்பட்ட தரவு புள்ளிகள் அடுக்குகளோடு பணிகள் சீராக நடைபெற்று வருகின்றன.

இதுவரை 13 லட்சத்து 59 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், 293 கட்டமைப்பு திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு, முழுவீச்சில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புவி சார் குறியீடுகளுடனான வரைபடங்கள், பண்முக இணைப்புகள், கண்காணிப்பு நடவடிக்கைகளால் பிரதமரின் கதி சக்தி திட்டம், நிலையான கட்டமைப்புகளுடன், வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா 2047ஆம் ஆண்டு மலர்வதற்கான உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் கூற்றுக்கு ஏற்ப,

ரயில் பாதை முதல் - நெடுஞ்சாலை வரை,

துறைமுகங்கள் முதல் - விமான நிலையம் வரை, இந்தியாவின் விரைவான விரிவான கட்டமைப்பு தளம், இலகுவான வாழ்க்கை முறையை உறுதி செய்வதோடு, வளத்தை முன்னெடுத்து செல்கிறது.

.. மியூசிக் ..

***********

<u>ஜிதேந்திரசிங்</u>

பிரதமரின் தன்தான்ய வேளாண் உத்திரவாத திட்டம், அடுத்த மாதம் தொடங்கப்படும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தால் வேளாண் பணிகள் உத்வேகம் பெறுவதோடு, தொலைதூரத்தில் வசிக்கும் விவசாய தொழில்முனைவோர் ஊக்கம் பெறுவார்கள் என்று கூறினார்.

கடந்த பட்ஜெட்டில் 100 மாவட்டங்களை வேளாண் மாவட்டங்களாக மேம்படுத்த மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டதை சுட்டிக்காட்டிய அவர், குறைந்த உற்பத்தி, குறுகியகால கடன் விநியோகம், குறைவான பயிர் சாகுபடி அடிப்படையில் இம்மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

***********

<u>பால் உற்பத்தி</u>

நாட்டின் பால் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் 63 சதவிகிதம் அதிகரித்து 239 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது என்று மத்திய மீன்வளம் கால்நடை பராமரிப்பு பால்வளத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலகளாவிய பால் உற்பத்தியில் 25 சதவிகித பங்களிப்புடன் இந்தியா முன்னோடி நாடாக நீடிப்பதாகவும் அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது நம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பால்வளத்துறை 5 சதவிகித பங்களிப்பை வழங்குவதோடு, 8 கோடி குடும்பங்களுக்கு நேரடி வேலை வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்தது.

நாட்டில் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு தலா 471 கிராமுக்கும் அதிகமாக பால் விநியோகம் உள்ளதாகவும், இது உலகளாவிய சராசரியை காட்டிலும் 149 கிராம் அதிகமாகும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

***********

<u>ஜே.பி.நட்டா</u>

நாடுமுழுவதும் ஒன்பது லட்சத்திற்கும் அதிகமான மருத்துவ முகாம்கள் இதுவரை நடைபெற்றுள்ளதாக மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தனியார் சார்பிலான சுகாதார மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், இதன் மூலம் 3 கோடியே 60 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளதாகவும், இது இன்னும், இரண்டு, மூன்று தினங்களில் 4 கோடியை தாண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு வழிகோலியதாகவும், இதனால் வரும்முன் காப்பதோடு ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு, நோய் கண்டறிதல் அதற்கான சிகிச்சை முறைகள் என அனைத்து அம்சங்களும் முன்னெடுத்துச்செல்லப்படுவதாக திரு.ஜே.பி.நட்டா குறிப்பிட்டார்.

***********

<u>சரக்கு சேவை வரி</u>

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்களால் நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பு முறை எளிதாகி நுகர்வோரின் சுமை பெருமளவு குறைந்துள்ளது.

மருத்துவ துறையில் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான 36 உயிர்காக்கும் மருந்துகளுக்கு முற்றிலும் வரி ரத்து செய்யப்பட்டுள்ளது மிகவும் பயனளிப்பதாக அரியலூர் சிவகங்கை மாவட்ட பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

.. வாய்ஸ் ..

***********

<u>கரூர் - மத்திய அமைச்சர்கள்</u>

கரூரில் த.வெ.க. பொதுக்கூட்ட நெரிசலில் உயிரிழந்தோரின் குடும்பத்தினரை மத்திய அமைச்சர்கள் திருமதி நிர்மலா சீதாராமன், டாக்டர் எல்.முருகன் ஆகியோர் இன்று நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்து கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் இரு அமைச்சர்களும் சந்தித்து நலம் விசாரித்து வருகின்றனர்.

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தங்கவேலு உள்ளிட்ட அதிகாரிகளும் உடனிருந்தனர்.

மாவட்ட அதிகாரிகளும், காவல்துறையினரும் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து அமைச்சர்களிடம் எடுத்துரைத்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 41 ஆக இன்று அதிகரித்துள்ளது.

80 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து தமிழக அரசின் சார்பில் ஓய்வுபெற்ற நீதிபதி அருணாஜெகதீசன் தலைமையிலான ஒருநபர் ஆணையத்தின் விசாரணை இரண்டாவது நாளாக இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

கூட்ட நெரிசல் நேரிட்ட இடம், பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடம் இந்த ஆணையம் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

***********

<u>முதலமைச்சர்</u>

கரூர் சம்பவம் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறுகளையும், வதந்திகளையும் பரப்ப வேண்டாம் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் தமது சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள காணொலி பதிவில் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விசாரணை ஆணையத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அனைத்து அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து பொதுக்கூட்டம் நடத்துவதற்கான விதிமுறைகள் வெளியிடப்படும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

***********

<u>இதய தினம்</u>

உலக இதய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதய ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தையும், இதய நோய் வருவதை தடுப்பதன் அவசியத்தையும் இத்தினம் வலியுறுத்துவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

சமச்சீரான உணவு, உடற் பயிற்சி, மன அழுத்தத்தை குறைப்பதற்கான பயிற்சிகள், போன்றவற்றை மேற்கொண்டு ஆரோக்கியமான இதயத்தை பராமரிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஆரோக்கியமான இதயத்திற்கான வழிமுறைகள் குறித்து திருச்சியை சேர்ந்த இதய மருத்துவர் டாக்டர் செந்தில்குமார் நல்லுசாமி எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்:

வாய்ஸ்

***********

<u>இருவரி</u>

அரியலூர் மாவட்டத்தில் கிராமப்புற தொழில் முனைவோர்கள் கடனுதவி பெற நாளைக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாநில அரசின் மருத்துவ திட்டத்தின் கீழ் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்றரை லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான செயற்கை கால்களை ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் இன்று வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் தேனம்பாக்கத்தில் தீயணைப்புத்துறை சார்பில் பள்ளி மாணாக்கருக்கான பேரிடர் விழிப்புணர்வு ஒத்திகை பயிற்சி இன்று நடைபெற்றது.

இதில் ஏராளமான மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

விழிப்புணர்வு பதாகைகளுடன் ஏராளமான கல்லூரி மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

***********

<u>திருச்சி தொழில்முனைவோர்</u>

திருச்சியில் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் சிறு குறு நடுத்தர தொழில்முனைவோர் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையினரின் மாநாடு இன்று நடைபெறுகிறது.

திருச்சியில் உள்ள தொழில்நிறுவனங்களுக்கு முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாக கொண்டு நடைபெறும் இம்மாநாட்டில் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான சிறப்பு பயிற்சி பட்டரைகள் இடம்பெறுகின்றன.

***********

<u>டென்னிஸ்</u>

ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் ரோஹன் போபண்ணா, ஜப்பானின் **Takeru** இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற அரையிறுதியில் இந்த இணை – அமெரிக்க இணையை 4-6 6-3 18-16 என்ற செட்களில் வென்றது.

***********

<u>கிரிக்கெட்</u>

ஐ.சி.சி உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டி நாளை தொடங்குகிறது.

இந்தியா தனது முதல் போட்டியில் குஹாட்டியில் நாளை இலங்கையை எதிர்கொள்கிறது.

***********